**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 173/2021 |
| Name | : Ramachandran |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். மேசன் வேலை செய்கிறேன். 08.01.2020ம் தேதி மாலை 07.15 மணிக்கு நான் பாப்பான்குளத்தில் இருந்த போது எனக்கு எனது தம்பி லட்சுமணன் அலைப்பேசியில் இருந்து அழைப்பு வந்தது. அதில் எனது தம்பி, அவரது மனைவி ஸ்ரீதேவிக்கு பாப்பான்குளம் பிரிவில் ராமசுப்பு தோட்டத்திற்கு அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் விபத்து நடந்த இடத்திற்கு போனேன். இரண்டு இருசக்கர வாகனங்கள் எதிரெதிரே மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. எனது தம்பிக்கு தலையிலும், அவரது மனைவிக்கு தாடையில் காயம் ஏற்பட்டிருந்தது. ஆஜர் எதிரி தான் அன்று எதிரே வாகனம் ஓட்டி வந்ததாக சொன்னார்கள். அவரும் அங்கிருந்தார். அவருக்கும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.24 13:05:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 173/2021 |
| Name | : | Jeeva |
| P.W. | : | 4 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**24.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். மேசன் வேலை செய்கிறேன். **09.01.2020** ம் தேதி மாலை சுமார் **06.45** மணி அளவில் பாப்பான்குளம் பிரிவு அருகே விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் பாப்பான்குளத்தைச் சேர்ந்த ஒருவர் கையெழுத்து போட்டார் அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) காயம்பட்ட லட்சுமணன் எனக்கு அண்ணன் முறை உறவு. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காயம்பட்டவர் எனது உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதால் காவல்

நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.24 13:05:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்